# எஸ். ராமகிருஷ்ணனின் சிறுகதைகளில் காணலாகும் சமுதாயச் சிந்தனைகள்

**ஆய்வாளர்**
ரா.சுமித்ரா (Ph.D., Ref No. MKU23PFOL11135)
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி (தன்னாட்சி)
மதுரை - 625 002.

நெறியாளர்
முனைவர். வளர்மதி,
தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி (தன்னாட்சி),
மதுரை 625 002.
**(மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)**

**Abstract-** Although the world has passed through many civilizations and become a modern world, man is not an individual who lives in isolation from many families called society. Because all the basic needs and feelings of human life are fulfilled through society. The individual has to turn to another human being to obtain the diffuse needs. It is human nature to want to share one's feelings with others instead of keeping them to oneself. Modern literature is the medium of that modern world. Through this literature, S.Ramakrishnan is shortly Called as in tamil ES.Ra, the hero of the Shortstories, who is a mirror of the society. This review article is designed to bring out the social thoughts through Ramakrishnan's short stories.

***Keywords:*** **Social Thoughts, Social Media, New Experience, Spirituality, Essence of Justice.**

## ஆய்வுச் சுருக்கம்

உலகம் பல நாகரிகங்களைக் கடந்து நவீன உலகமாக மாறினாலும் மனிதன் சமுதாயம் என்ற பல குடும்பங்களில் இருந்து தனித்து வாழ்பவன் அல்லன். ஏனெனில் மனித வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகள், உணர்வுகள் அனைத்தும் சமுதாயத்தின் வழியேதான் நிறைவு பெறுகின்றன. பரவிக் கிடக்கும் தேவைகளைப் பெறத் தனிமனிதன் இன்னொரு மனிதனை நாட வேண்டியுள்ளது. தன்னுடைய உணர்வுகளைத் தனக்குள்ளேயே அடக்கிக் கொள்ளாமல் மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள எண்ணுவது மனித இயல்பு. அந்த நவீன உலகத்தின் ஊடகமாக விளங்குவது நவீன இலக்கியம். இவ்விலக்கியத்தின் மூலம் சமுதாயத்தின் கண்ணாடியாய் விளங்கும் கதைச்சொல்லி நாயகரான எஸ்ரா என்று அழைக்கப்படும் எஸ். ராமகிருஷ்ணனின் சிறுகதைகள் வழியில் சமுதாயச் சிந்தனைகளை வெளிக்கொணர்ந்து எடுத்துரைப்பதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

## திறவுச் சொற்கள்:

சமுதாயச் சிந்தனைகள், சமுதாய ஊடகங்கள், புதிய அனுபவம், ஆன்மிக நம்பிக்கை, நீதியின் சாரம்.

## முன்னுரை :

சிறுகதை என்பது சுருக்கமான கதை கூறும் புனைவு வகை உரைநடை இலக்கியமாகும். சிறுகதை என்பது கதை ஆசிரியரின் கற்பனைச் சிந்தனையில் உதித்து, வாசகர்களின் மனதில் நிறைவு கொடுப்பதே சிறந்த சிறுகதையாகும். சிறுகதைகள் காலத்திற்கு காலம், எழுத்தாளருக்கு எழுத்தாளர் மாறுபடலாம். எப்படி இருந்தாலும் அது சமுதாயத்தை பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடி என்பது உறுதி. சிறுகதையின் தொடக்கம் படிப்பவரின் ஆர்வத்தையும், கற்பனையையும் தூண்டக்கூடிய வகையில் அமைவது சிறப்பு. அந்த வகையில் தன்னுடைய உரையின் நடையால் இலக்கிய உரைநடையில் கால்பதித்து வீறுநடை போடும் எஸ்ரா என்று அழைக்கப்படும் 'எஸ். ராமகிருஷ்ணனின் சிறுகதைகளில் காணலாகும் சமுதாயச் சிந்தனைகள்' என்ற தலைப்பின் மூலம் சமுதாயத்தில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளையும், புதிய அனுபவச் சிந்தனைகளையும், புதிய பயணமும், தேடலும் புதிய அனுபவச் சிந்தனைகளை எடுத்துரைக்கும் பாங்கினையும் சமுதாயத்தின் பார்வையில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வு நெறிமுறைகள்:

## பெண்ணியச் சிந்தனைகள்:

ஒரு சமுதாயத்தின் வேராகத் திகழ்வது குடும்ப அமைப்பே. அக்குடும்பத்தின் ஆணிவேராக இருப்பது பெண்களே. அப்பெண்களின் மனநிலைகளை பல கவிஞர்கள் வியந்து புகழ்ந்துள்ளனர்.

"பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா!
பெண்மை வெல்கவென்று கூத்திடுவோமடா!" (பா.கவிதைகள், ப.433)

என்னும் பாரதியாரின் வரிகளின் மூலம் பெண்மையின் சிறப்பை அறியலாம்.

இதையே எஸ்.ராமகிருஷ்ணன் தன் சிறுகதைகளில் பெண்கள் தங்களின் வெளிப்படுத்த முடியாத துயரத்தை கண்ணீராக மாற்றுவதைப் போல வாழ்க்கை நெருக்கடிகளில் இருந்து மீளும் வழிகளைத் தாங்களே கண்டறிகின்றனர் என எடுத்துரைக்கிறார்.

'அவளது வீடு' என்ற கதையில் பெண்களுக்கு வீடு என்பது, வெறும் வசிப்பிடம் அல்ல, ஒரு மாயத்தோட்டம். ஒரு வீட்டுக்குள் சென்றதும் பெண் உருமாறிவிடுகிறாள். ஆண்கள் வீட்டைப் பயன்படுத்துகிறார்கள். பெண்கள் வளர்த்தெடுக்கிறார்கள் என்று ஒரு ஏழைப் பெண்மணியின் வீடு கட்டும் கனவை 'அகல்யா' என்ற விசித்திரமான கதாபாத்திரம் மூலம் எடுத்துரைக்கிறார்.

'எம்பாவாய்' என்ற கதையில் நன்மதி மற்றும் வாஹினி என்ற இரு கதாபாத்திரங்களின் மூலம் கல்வி கற்ற பெண்ணின் மனநிலையையும், கல்வி இல்லா ஒரு இல்லத்தரசியின் மனநிலையையும் ஒப்பிட்டுக் கூறியுள்ளார். இல்லத்தரசிகளின் ஆசைகள் நிராசைகளாய் ஆகிப் போவதை தத்ரூபமாகச் சொன்ன விதம் அழகின் உச்சம்.

"Education is the most powerful weapon. You can use to change the world".

- Nelson Mandela.

என்ற கூற்றிற்கிணங்க அமைந்த அந்த கதை ஒரு மனிதனின் புத்தக வாசிப்பும் வாழ்க்கையை வசந்தமடையச் செய்யும் என்பதற்கு உதாரணமாய் திகழ்கிறது.

'சௌந்தவல்லியின் மீசை' என்ற கதையில் ஒரு ஏழைப் பெண்ணின் அழகில்லா புறத்தோற்றத்தை சமுதாயம் ஏளனம் செய்வதால் அவளுடைய மனம் துன்பப்படுவதும் அதனால் அவளின் எதிர்காலம் விரக்தியடைவதையும் சமூகத்திற்கு விழிப்புணர்வூட்டும் விதமாக அமைந்தது அருமையாக உள்ளது.

"குறிஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு"

(நாலடியார் பாடல்: 131)

என்ற நாலடியாரின் பாடலுக்கேற்ப பெண்களுக்கு புறவழகு என்பது நிரந்தரமானது அன்று. கல்வியழகே நிரந்தரமானது என்பதை புரியவைக்கும் நோக்கத்தோடும் வறுமையை 'கல்வி என்னும் கூரிய ஆயுதம் கொண்டு எதிர் கொள்வோம்! எதிர்காலத்தை செழுமையாக்கவோம்! என்று நினைக்க வைக்கிறது.

***பயணச் சிந்தனைகள் :***

**புதிய பயணம், புதிய பாதை, புதிய அனுபவம் :**

ஒவ்வொருவரின் வெற்றியும் ஒரு புதிய பயணமே. வெற்றி, தோல்வி பயணங்கள் நமக்கான பாதையை அமைத்து புது அனுபவத்தை நமக்குக் கொடுக்கும். நாம் பெற்ற ஒவ்வொரு அனுபவமும் சமுதாயம் நமக்குக் கற்றுக்கொடுத்த பாடங்கள். அச்சமுதாயத்தில் எஸ்.ராமகிருஷ்ணன் தன்னுடைய சிறுகதைகளின் மூலம் தான் கண்ட பயணத்தை அற்புதமாக நமக்குக் கொடுத்துள்ளார்.

'காகிதப் பறவைகள்' என்ற கதையில் காகிதப் பறவைகளுக்கும் ஒரு பயணம் உண்டு என்று காட்டியுள்ளார். இக்கதையில் 'ஸ்டெல்லா' என்ற பெண் தன் இயலாமையால் சிறகொடிந்து போகாமல் தன்னம்பிக்கையுடனும் இறைபக்தியுடனும் வாழ்வை எதிர்கொள்கிறாள். ஸ்டெல்லா வீட்டை விட்டு வெளியேறியதும் தீய பழக்கங்கள் கொண்ட அவள் தங்கை திருந்துகிறாள். தனித்திருந்த நேரங்களில் ஸ்டெல்லாவைப் போல் காகிதப் பறவைகள் செய்கிறாள். காகிதப் பறவைகளுக்கும் பயணம் உண்டு என்ற நினைவுகளுடன் அழுகிறாள். ஏதோவொரு புள்ளி பிசகி விட்டால் வீடு விலகிப் போய் விடும். நம் பயணங்களும் கூட என காட்டியுள்ளார்.

'தண்ணீரின் திறவுகோல்' என்ற கதையில் ஒரு ஆசிரியர் தன்னுடைய மாணவனுக்கு ஆன்மிக நம்பிக்கை பற்றிய தெளிவுரையை விளக்குகிறார். "எல்லாச் சாவிகளும் பூட்டினைத் திறக்க உருவாக்கப் படுவதில்லை. சில சாவிகள் தனித்திருக்க கூடியவை" என்ற தத்துவத்தைக் கூறுகிறார். இதன் மூலம் எல்லோருடைய பயணமும் வெற்றியை மட்டும் தருவதில்லை. அவை தோல்வி என்னும் சுவடுகளாக பல அனுபவங்களையும் தருவதாக அமைகிறது என்பதை உணர்த்துகிறது.

'வாளும் மலரும்' என்ற கதையில் ஒரு கவிதை வாளை மலராகவும், பின் மலரை வாளாகவும் மாற்றுகிறது என்று கூறுகிறார். இதன் வாயிலாக ஒவ்வொரு புதிய பயணமும் புதிய பாதையை வலிமையுடனும், வலிகளுடனும் அமைகிறது என்பது உறுதி. பல அனுபவங்கள் விந்தைகளையும் விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்துவதாக அமைகிறது எனக் காட்டுகிறது.

**அறச் சிந்தனைகள் :**

தமிழர் பொருள் ஈட்டி அறம் செய்து இன்புற்றனர். இல்வாழ்க்கையை அறவாழ்க்கையாகக் கொண்டனர். அறம் என்பது கொடுப்பதில் இல்லை. அதைப் பெறுபவரிடமே இருக்கிறது என்று ஆசிரியர் தன் உரை நிகழ்ச்சி ஒன்றில் கூறியுள்ளார். அறம் செய்யும் போது அதைப் பெற்றுக் கொண்டு மகிழ்ந்தால் அறம் மகிழ்கிறது. அவை மறுக்கப்பட்டால் அறம் மறைகிறது. அறம் கூறும் மன்றங்கள் அரசனின் ஆட்சிக்கு துணைபுரிந்தன. "அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்" - என்கிறது புறநானூறு.

மனுநீதிச் சோழனின் ஆராய்ச்சி மணி அடித்த போது உயிர்களை பாரபட்சம் பாராமல் நீதியை நிலை நாட்டினான். அதுபோல் 'வானோர்' என்ற கதையில் ஆசிரியர் சாக்கிய மலைப்பகுதி மணியடித்த போது அங்கு அறம் அழிந்த கதையை நினைவு படுத்துவதாய் அமைகிறது என்றார். யார் அடித்தும் ஒலிக்காத மணி ஒரு ஏழைப்பெண்ணின் கண்ணீர் கைக்கு ஒலித்தது. நடந்தது யுத்தமில்லை இன அழிப்பு அதற்காக அவள் அடித்த மணி மகிழ்விப்பதற்காக ஒலிக்கப்படவில்லை. எங்களின் துயரத்தை புரிந்து கொள்வதற்காக

மணி ஒலித்திருக்கிறது என்று கூறுவதன் மூலம் நீதியின் சாரம் உயிரோடியிருக்கிறது என்பதை உணர்த்துவதாக அமைகிறது.

'கோகிலவாணியை யாருக்கும் நினைவிருக்காது' என்ற கதையில் ஒரு பெண்ணிற்கு இழைக்கப்படும் அநீதியால் சமூகத்தில் அவள்படும் இன்னல்களையும் அப்போது மின்மினிப் பூச்சிகள் பறக்கும் காட்சியைப் பார்க்கும் போது இருட்டிற்கு கண்கள் முளைத்து அவள் அழுவதைப் பார்த்துக் கொண்டிருப்பதைப் போலவே கோகிலவாணியின் மனநிலை இருந்ததாக அழகாக அறச்செயல் தவறிய நிலையை சித்தரித்துள்ளார்.

உலகமே பரிசாகக் கிடைத்தாலும் பழிதரும் செயல்களைச் செய்ய தமிழர்கள் மறுத்தனர். சங்க காலத்தில் அறத்தை மனித உறவின் மையமாகக் கொண்டிருந்தனர். அந்த அறத்திற்கு முன் உதாரணமாய் வாழ்ந்தவர் 'நீரிலும் நடக்கலாம்" என்னும் சிறுகதையில் இடம்பெற்ற மயில் வாகனம் என்ற கதாபாத்திரம். உலகமே முன்னோக்கி நடந்து போய்க் கொண்டிருக்கையில் அவர் ஒரு ஆள் மட்டும் கைகளை வீசி பின்னோக்கி நடந்துக் கொண்டிருந்தார். அதற்குக் காரணம் அன்னதானம் என்ற அறச்செயலை தன்னால் செவ்வனே செய்ய முடியவில்லை என்ற விரக்திதான். அடுத்தவருடைய பசியை மதிக்கத் தெரிந்தவன் தான் நிஜமான மனிதன். மற்றவர்களை தண்டிக்கிறதுக்கு எளிமையான வழி தன்னைத் தானே தண்டித்துக் கொள்வது தண்டனையா? இல்லை.. இதனை அவர் சுதந்திரமாக எண்ணிக் கொண்டார்.

பின்னோக்கி நடப்பவனுக்கு உலகம் பெரியது. உலகின் போக்கில் நாம் போகக் கூடாது நமது போக்கில் உலகைத் திருப்பி அறச்செயல்களை நிலைநாட்ட எண்ணினார் போன்று தோன்றுகிறது. அறச்செயல் புரியாத உலகை பரிகசிக்க விரும்புவர் போல பின்னோக்கி நடக்கிறார் என நினைக்க வைக்கிறது.

### முடிவுரை

கதைகளிலிருந்து உண்மையைப் பிரிக்க இயலாது. அந்த உண்மைகளே கதைகளை ஒளிரச் செய்கிறது. எஸ்.ராமகிருஷ்ணனின் சிறுகதைகளிலும் தன்னைத் தாண்டி பிறரைப் பற்றி சிந்திக்கும் சிறந்த அறத்தைப் பற்றியும், பெண்ணியம் சமூகத்தின் ஆணிவேராகத் திகழ்வதையும், புதிய பயணம் புதிய நம்பிக்கையைத் தரும் என நேர்மறையான பல தகவல்களையும் சமூகவிழிப்புணர்வுடனும் வித்தியாசமான கருத்தாழத்துடனும் படைத்துள்ளார்.

## துணை நூற்பட்டியல்:


1) **எஸ்.ராமகிருஷ்ணன்** (2019) - **மழைமான்(சிறுகதைகள்)**
**தேசாந்திரி பதிப்பகம்**,
**டி**-1,**கங்கைஅப்பார்ட்மெண்ட்**,
110, 80 **அடி ரோடு**,
**சத்யா கார்டன்**, **சாலிக்கிராமம்**,
**சென்னை** 600 093.

2) **எஸ்.ராமகிருஷ்ணன்** (2021) - **ஐந்து வருட மௌனம்**
(**சிறுகதைத் தொகுப்பு**)
**தேசாந்திரி பதிப்பகம்**,
**டி**-1,**கங்கைஅப்பார்ட்மெண்ட்**,
110, 80 **அடி ரோடு**,

சத்யா கார்டன், சாலிக்கிராமம்,
சென்னை 600 093.

3) எஸ்.ராமகிருஷ்ணன்(2020)-அவளதுவீடு
(சிறுகதைத் தொகுப்பு)
தேசாந்திரி பதிப்பகம்,
டி-1,கங்கைஅப்பார்ட்மெண்ட்,
110, 80 அடி ரோடு,
சத்யா கார்டன், சாலிக்கிராமம்,
சென்னை 600 093.

4) எஸ்.ராமகிருஷ்ணன் ( 2014) - (எழுத்துலகம்) யாமம்,
தொகுப்பாசிரியர்: எஸ். ஏ. பெருமாள்,
எஸ் ராமகிருஷ்ணனின் படைப்புகள்
மீதான பார்வைகள்,
உயிர்மை பதிப்பகம்
29, அபிராமபுரம்,
சென்னை 600018.